




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், குடியரசு தினவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (05.01.2017) நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 17/2017 நாள்: 05.01.2017

**குடியரசு தினவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று (05.01.2017) நடைபெற்றது.**

குடியரசு தினவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (05.01.2017) நடைபெற்றது.

அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் குடியரசு தினவிழா நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு வருகை தரும் முக்கிய விருந்தினர்களை உட்கார தேவையான அனைத்து வசதிகளையும் செய்திட உதவி ஆணையர் (ஆயம்) அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், நாகர்கோவில் நகராட்சி மூலம் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட வேண்டும் எனவும், வருவாய்த்துறை, சமூக நலத்துறை மற்றும் பிறதுறைகள் மூலம், அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், கடந்த ஆண்டை போல, நடப்பாண்டிலும் விழா சிறப்பாக நடைபெற பொதுகமக்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் செய்திட வேண்டும் எனவும், விழாவில் விபத்துக்கள் ஏற்படாதவகையில், தீயணைப்புத்துறை மூலம் தீயணைப்புக்கருவிகளை தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும், பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும், கடந்த ஆண்டை போல இவ்வாண்டும் குடியரசு தினவிழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற, அனைத்து அலுவலர்களும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு.ஆர். ராஜ்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. விஜயராணி, உதவி ஆணையர் (ஆயம்) திரு. காளிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வளர்ச்சி) திரு. கோமதிநாயகம், தனிதுணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. சந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு. சிவதாஸ், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திரு. அசோக் மேக்ரின், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புபணி துறை அலுவலர் திரு. கல்யாணகுமார், வட்டாட்சியர்கள் திரு. அருளரசு, திருமதி. முத்துலெட்சுமி, திருமதி. புவனேஸ்வரி, திருமதி. ஷீலா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.